1975 அக்டோபர் 30]

நிலையில் பாதுகாப்புப் படையில் 15 வருடம் பணிசெய்திருந்தால் மாவட்ட ஆட்சியாளர் பரிந்துரையினபேரில் 2 ஆயிரம் கடன் அளிக்கிறோம். அவர்களுக்கு உள்ள தொழில், வாணிபம், தொழிலில் அவர்களுடைய திறமை, பயிற்சி இவைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு மாவட்ட ஆட்சியாளர் கொடுக்கிற பரிந்துரையின் பேரில் கடன் உதவி காசோலை மூலம் வழங்கப்படுகிறது. இது துவங்கியதிலிருந்து இதுவரையில் 1,417 பேர் வீரர்களுக்கு ரூ. 38,21,000 அளவிற்கு கடன் உதவி வழங்கப்பட்டிருக்கிறது.

நாட்டறம்பள்ளியில் தொழில் பயிற்சிப்பள்ளி

* 141 வினா—திரு. டி. சி. திம்மராயக் கவுண்டர் : மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருப்பத்தூர் வட்டம், நாட்டறம்பள்ளியில் (I.T.I.) இன்ஸ்டிடியூட் தொடங்கும் யோசனை அரசுக்கு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

தஞ்சாவூர் மாவட்டத்தில் மீன்பிடித் தளங்கள்

* 142 வினா—திரு. என். கிட்டப்பா :

திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு சமூகநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நடப்பு ஆண்டில், தஞ்சை மாவட்டத்தில் மீன்பிடித் துறைமுகங்கள் ஏற்படுத்தும் திட்டம் எந்த அளவுக்கு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது ?

(இ) எங்கெங்கு ஏற்படுத்தப்படும் ?

(உ) அவைகளுக்கான மதிப்பீட்டுத் தொகைகள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : (அ), (இ) & (உ) தஞ்சை மாவட்டத்தில், மல்லிப்பட்டணம், கோடிக்கரை ஆகிய இரண்டு இடங்களில் மீன்பிடி தங்கு தளங்கள் அமைக்க அரசு

திட்டமிட்டுள்ளது. மேற்படி இரண்டு இடங்களுக்கும் முறையே ரூ. 15.85 இலட்சம், ரூ. 20.50 இலட்சம் மதிப்பீடுகள் செய்யப்பட்டு இந்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. மல்லிப்பட்டிணத்தில் மதிப்பீட்டிற்கு இந்திய அரசு ரூ. 10.60 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. கோடிக்கரைக்கும் ரூ. 14.40 இலட்சத்திற்கு செப்டம்பர் மாதத்தில் இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மல்லிப்பட்டிணத்தில் தங்கு தளம் அமைக்க பொதுப் பணித் துறையினரால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்த துறைமுகங்களை அமைக்கும் வேலை விரைவில் ஆரம்பிக்கப்படும்.

தஞ்சை மாவட்டத்தில் மேலும் இரு இடங்களில், அதாவது தோப்புத்துறை (ஆற்காட் துறை) மற்றும் திருமுல்லைவாசலில் படகு தங்கு தளங்கள் அமைப்பதற்கு மீனளத்துறை திட்டமிட்டிருக்கிறது. இதற்கான மதிப்பீடுகளும் வரைபடங்களும் பொதுப் பணித் துறையினரால் தயாரிக்கப்பட்டு அவை பெங்களூரில் உள்ள முன்-முதலீட்டு ஆய்வுத்துறையின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்த ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன், அவற்றிற்கு இந்திய அரசின் ஒப்புதல் பெற்று, இந்த இடங்களிலும் தங்குதளங்களை அமைப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் தஞ்சாவூர் மாவட்டத்தில் பூம்புகார் என்ற இடத்திலும் ஒன்று அமைக்க ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் ஏற்கனவே நாகப்பட்டிணத்தில் ஒரு படகு தங்கு தளம் ரூ. 5.16 இலட்சத்தில் நிறுவப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே இன்னும் இரண்டு இடங்களில் மீன்பிடி துறைகள் ஏற்படுத்தப் போவதாக அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லி, அந்த பூம்புகாரிலேயும் அமைக்க இத்தகைய ஆலோசனை இருப்பதாகச் சொன்னார்கள். இப்போது பூம்புகார் பகுதி நகரியமாக ஆகக்கூடிய அளவிற்கு இருந்து கொண்டிருக்கிறது. பல வகைகளிலே சிறப்படைந்து வருகின்ற அந்த பூம்புகாரிலே ஒரு மீன்பிடி துறைமுகம் அமைக்க உடனடியாக உத்தரவின் மூலமாக — அந்த இடத்திலே சங்கக் காலத்திலேயே பெரிய துறைமுகம் காவிரிப்பூம்பட்டிணத்திலே இருந்ததாகச் சொல்லப்படுகிறது — ஆவன செய்ய அரசு முன்வருமா?

1975 அக்டோபர் 30]

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தை மையமாக வைத்துத்தான் ஏற்கனவே தமிழக அரசு பூம்புகாரிலே ஒரு மீன்பிடி துறைமுகத்தைக் கட்டவேண்டுமென்று மத்திய அரசுக்கு செய்துகொண்ட விண்ணப்பம் தற்போது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்பதை நான் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, மல்லிப்பட்டினம், தோப்புத்துறை, திருமுல்லைவாசல், கோடிக்கரை ஆகிய இடங்கள் மட்டுமல்லாது, பூம்புகாரிலேயும் அமைக்க இருப்பதாகச் சொல்கிறார்கள். டச்சுக்காரர்கள் காலத்திலேயே துறைமுகமாக தரங்கம்பாடி இருந்து இருக்கிறது என்று வரலாறு சொல்கிறது. ஆகவே, அங்கேயும் ஒரு மீன்பிடி துறைமுகம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, தமிழக அரசு செய்கின்ற விண்ணப்பங்களை பெங்களூரில் உள்ள முன்னாய்வுக் கூடத் திட்டத்தினர் ஆய்வு செய்கிறார்கள், அவர்களுடைய ஆய்வில் எங்கெங்கு மீன்பிடிப்பதற்கு வசதியாகவும், துறைமுகம் அமைப்பதற்கு ஏற்ற இடமாகவும் இடங்கள் இருக்கின்றனவோ அந்த இடத்தை மத்திய அரசு அனுமதிக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை வலியுறுத்த அரசு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : அமைச்சர் அவர்கள் மீன்பிடி துறைமுகங்கள் அமைக்கிற இடங்களைச் சொல்லியிருக்கிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்திலே மீன்பிடிக்கிற துறைமுகங்களை அமைக்கிற உத்தேசம் அரசுக்கு இருக்குமானால் மறுபரிசிலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சி தரும் வகையில் கோவளத்திலேயும், கடப்பாக்கத்திலேயும் இரண்டு மீன்பிடி துறைமுகங்களைக் கட்டுவதற்கு ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.